REGD. No. M. 6311

PHONE No. 55656

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 194

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F

சென்னை: தை 14உ புதன் (27—1—54) ★ ★ ★ வெளியூர்: தை 15உ வியாழன் (28—1—54)

'தாய் மொழிக்கு ஆக்கம் தேட மாணவர்களே சிறந்தவர்கள்'

—(:)—

'தமிழில் உரையாடுவதே தமது கல்விக்கு இழுக்கு எனக் கொண்டுள்ள சிறுமதி தொலையவேண்டும்'

—(:)—

கல்லூரி மாணவர் தமிழ் விழாவில் அண்ணுதுரை

★

சென்னை, ஜன. 27 —

"தமிழனாகப் பிறந்த ஒருவன் சகித்துக்கொள்ளாத அளவுக்குக் கொடுமைகள் இந்த நாட்டில் நடைபெற்று வருகின்றன. நமது சொந்த நாட்டில், நமது தாய் மொழிக்கு இருக்க வேண்டிய நியாயமான இடம், நம்மால் தரப்படவில்லை; வாழ்வுத் துறையின் முக்கிய இடங்களிலெல்லாம், தமிழ் மொழி அலட்சியம் செய்யப்படுகிறது; அரசாங்க அவையிலே, தமிழ் இல்லை; ஆலயங்களிலே தமிழின் ஒலி கிளம்பவில்லை; அறங்கூறு மண்டபங்களிலே, நம் தாய் மொழியின் சாயல் இல்லை; அனைத்துக்கும் மேலாக, தமிழனாகப் பிறந்த ஒருவன், மற்றொரு தமிழனைச் சந்திக்கும் போது, அவர்கள் பரிமாறிக்கொள்ளும் பேச்சு வார்த்தைகளிலே, தமிழ் மணம் கமழவில்லை; தமிழைக் கையாளுவதே, தன்னுடைய படிப்பறிவுக்குப் புறம்பானதென்ற எண்ணம் நம் உள்ளத்திலே ஊறிவிட்டிருக்கிறது. இந்த நிலை நீடிக்கும் வரையில் தமிழ் மொழி வளர வேண்டும் என்று பேசிக்கொண்டிருப்பதிலே, எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. மொழித் துறையில் நிலவுகின்ற குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும். அந்தப் பணியை முடிக்க, இப்போது கிளம்பிக்கொண்டிருக்கும் மாணவர் பட்டாளம் முற்றும் தகுதி படைத்ததாகும்,"

—என்று, 26—1—54 செவ்வாயன்று, வட சென்னை தியாகராயர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாச் சொற்பொழிவில் தோழர் அண்ணுதுரை குறிப்பிட்டார்.

நேற்று மாலை 5-30 மணிக்கு வண்ணை தியாகராயர் கல்லூரியில் கல்லூரி மாணவர் தமிழ் விழா நடைபெற்றது. பச்சையப்பன் கல்லூரி மாணவர் தலைவர் வி. வா. ஞானசம்பந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதன்பின் கல்லூரித் தலைவர் தலைமை உரை நிகழ்த்தினார். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் தமிழ் இலக்கியத்தின் மாண்பு குறித்துப் பேசினார்.

தோழர் அண்ணுதுரை மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தியாகராயர் கல்லூரியில் இந்த ஆண்டு கூட்டப்பட்டிருக்கும் தமிழ் விழா நிகழ்ச்சி ஒரு புதுமையானது. சென்னையிலுள்ள பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த தமிழ் மன்ற மாணவர்கள் கூடிக் கலந்து பேசி, அனைவரும் ஒருமித்த கருத்துடன் ஒத்துழைத்து, ஆங்காங்கு தமிழ் விழா நடத்த முற்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தனித்தனியாக அந்தந்தக் கல்லூரிகளில் நடத்தப்படும் தமிழ் விழா நிகழ்ச்சிகளைக் காணும் நான், இதுபோன்ற கூட்டு முயற்சியுடன் கூடிய நிலை ஏற்படுமானால், எவ்வளவு பயன் தரத்தக்கதாக இருக்கும் என்று நினைத்ததுண்டு. இந்த ஆண்டு, நான் நினைத்து வந்ததை நடைமுறையில் செய்து காட்டிவிட்டார்கள் மாணவர்கள்.

"மாணவர்களின் இந்த ஒற்றுமைப் பண்பும், அதற்குக் காரணமான தமிழ் மொழிமீது உள்ள ஆர்வமும், இந்த இரண்டையும் உள்ளடக்கி வளர்ந்து வரும் தமிழ் மொழியின் சிறப்பும், இந்த நாட்டின் எதிர்கால வாழ்வுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது.

"பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்மொழி இருந்த நிலைமையையும், அதைக் கற்றுக்கொடுத்து வந்த தமிழாசிரியர்களின் அவலநிலையையும், கண்முன் நிறுத்தி, அதே நோக்கில் இன்றைய தமிழ் மொழியின் தன்மையையும், தமிழாசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தையும் எண்ணிப் பார்த்தால், நாம் நிச்சயமாகத் தமிழை வளர்க்கிறோம், மறைந்து கிடந்த அதன் பெருமையை ஓரளவுக்கு மீட்டுத் தந்திருக்கிறோம் என்பது தெளி

கோல்வால்கரின் ஜாதிப் பித்து!

சென்னை, ஜன. 27—

"சாதி அமைப்பு சமூக அமைப்பின் அடிப்படையாகும். இச்சாதி பாகுபாடு, பிரிவினையை ஏற்படுத்தவோ, குழப்பத்தை உண்டு பண்ணவோ ஏற்படுத்தப்படவில்லை. தற்சமயம் இச்சாதி பாகுபாடு, தங்கள் ஒற்றுமையைக் குலைப்பதற்குக் காரணமாக இருப்பது பரிதவிக்கக் கூடியது,"

—என்று, இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், ஆர். எஸ். எஸ். கட்சித் தலைவர் எம். எஸ். கோல்வால்கர் குறிப்பிட்டார்.

வாகிறது.

"பெரிய எழுத்து 'நல்ல தங்காள் கதை,' 'அல்லி அரசாணி மாலை,' 'ஆரவல்லி — சூரவல்லி கதை,' என்ற புத்தகங்கள் மட்டுமே வெளியிடப்பட்டு வந்த தமிழ் இலக்கிய உலகத்தில் இன்று ஆங்கில நூல்களுக்கு சமமாக ஆயிரக்கணக்கான பதிப்புகள் வெளி வந்திருப்பது தமிழ் வளர்ந்துள்ளதென்பதற்குப் போதிய சான்றாகும்.

"இவைகள் மட்டும் போதா. விவகார உலகத்தில் வளர்ந்திருக்கும் தமிழ் மொழியின் அளவு நமது வாழ்விலும் தமிழ்ப் பண்பை இருக்கவில்லை.

"நமது நாட்டு அரசாங்க அவையிலே தமிழ் இல்லை; ஆலயங்களிலே தமிழின் ஒலி கிளம்பவில்லை; அறங் கூறு மண்டபங்களிலே நம் தாய்மொழியின், சாயல் இல்லை; அனை

(4-ம் பக்கம் பார்க்க)

கர்ம வீரர் ராயின் பூத உடல் எரிக்கப்பட்டது

நாட்டின் நாலுபக்கங்களில் இருந்தும் அனுதாபம்

டேராடூன், ஜன. 26 —

காலஞ்சென்ற பேரறிஞர் எம். என். ராய் அவர்களின் பூதஉடல் இன்று மாலை 5 மணியளவில், அலங்கரிக்கப்பட்ட ஒரு 'ஜீப்' காரில் வைக்கப்பட்டு, நகரின் முக்கியத் தெருக்களின் வழியாக ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு, இடுகாட்டில் எரிக்கப்பட்டது. ஏராளமான நண்பர்கள் ஒன்றுகூடி, மாவீரருக்குத் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

இந்தியத் துணைக் கண்டத்தின் நாலு பக்கங்களில் இருந்தும் அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தன.

ராயின் மனைவியான எலன் ராய் அவர்களுக்கு ஆறுதல் அனுதாபச் செய்தி ஒன்றை குடியரசுத் தலைவர் அனுப்பியுள்ளார்.

இந்தியப் பிரதமரும், சென்னை, வங்காள மாநில கவர்னர்களும் அனுதாபத் தந்திச் செய்திகள் அனுப்பினர்.

'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்ரமணியம் அவர்கள் அனுதாபச் செய்தி:—

"இளமையில் போதிய கல்வி கற்காமல் புரட்சிகரமான வாழ்க்கை நடத்தி, கல்லூரியில் கற்காமலே அறிவியல் துறைகள் அனைத்திலும் ஒருவர் சிறந்த புலமை பெறலாம் என்பதைப் பின்னர் மெய்ப்பித்துக் காட்டிய வங்காளப் பார்ப்பனக் குடிப்பிறந்தவரை நன்கு தெரிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாம் ஆராய முனையும் எல்லா அறிவியல் துறைகளிலும் தன் விகாரற்ற தனி பெரும் முதல்வராக இருந்து வந்தவர், ராய் என்னுடைய இந்த விற்பன்னர்.

அரசியல் தத்துவங்களில் மட்டுமே சம்பவித்தகாரர் அவர் இருக்கவில்லை. எல்லா அறிவியல்களிலும் அவர் பேரறிஞராக விளங்கினார். பல ஐரோப்பிய மொழிகளில் அவர் புலமை பெற்றிருந்தார். பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் முதல் நூலாக சில தீட்டியுள்ளார்.

தான் பிறந்த குடியின் மடமையையும் கொடுமையையும் தொலைத்துத் தலை முழுகியவர் ராய். குறிப்பிட்ட ஜாதியில் ஒருவன் பிறக்கிறான் என்பதை அவர் என்றும் ஒப்புக்கொண்டது கிடையாது.

"நாம்" சாதிப் பற்றுள்ளவர்களாகி விட்டோம்"

—

பண்டிதர் வாய்மொழி

கல்யாணி, ஜன. 27—

"நாம் ஏன் பிளவுபட்டு ஒருவரையொருவர் விரோதித்துக் கொள்ள வேண்டும்? இதற்குக் காரணம் நாம் பற்பல சாதியினராகப் பிரிந்துள்ளோம்; நாம் சாதிப் பற்றுள்ளவர்களாகவே ஆகிவிட்டோம்; நாம் பேதப்பட்டே வாழுகிறோம்; நாம் நமது சொந்தக் கூண்டுக்குள்ளேயே வாழ்கிறோம்,"

—இவ்வாறு, ஒரு பீகாரியும், வங்காளியும் ஒரு சிறு காரியத்தைக் குறித்து, சச்சரவிடுகையில், பண்டித நேரு குறிப்பிட்டார்.

வாரம் ஒரு வர்ணம் மாறும் ரோஜா

—

ரஷ்யாவில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாகத் தகவல்

லண்டன், ஜன.

ஒரு 'ரோஜா' புஷ்பம் வாரத்திற்கு ஒரு வர்ணம் காட்சியளித்து, வாடி வதங்கும் போது அசல் ரோஜாவைப் போலத் தோன்றச் செய்ய முடியும் புதிய ரஷ்யத் தாவர நிபுணர் கண்டுபிடித்திருப்பதாக செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. பிரிட்டிஷ் ரோஜா சங்கக் காரியதரிசி இது பற்றி கூறுகையில், 'இது சாத்தியமானதே' என்றார்.

—

இந்திய சர்க்கார் மானியம்

சென்னை, ஜன.

தொழிலாளர்களுக்கு வீடுகள் அமைத்துத் திட்டத்திற்காக 1953—5 இந்திய சர்க்கார் ரூ. 1,13,4 ஒதுக்கியுள்ளது.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 27—1—1954 புதன்

அடக்குமுறை திரும்புகிறது!

ஜனநாயகப் பண்பாட்டில் மிக முக்கியமானவைகளாகக் கருதப்படுபவை, எண்ணும் உரிமையும், பேச்சுரிமையும் ஆகும். சமுதாயத்தில் காணப்படும் குறைகளைத் திருத்தவும், அரசியல் பொருளாதாரத் துறைகளில் உண்டாகும் சீர்கேடுகளை நீக்கவும், இந்த அடிப்படை உரிமைகள் அவசியமாகும்.

எண்ணுதல், பேசுதல், எழுதுதல் இந்த உரிமைகள் அற்ற இடத்தில் எதேச்சாதிகாரம் வலுவடைகிறது. மாறாக எதேச்சாதிகாரம் வலுவடைய அடைய இந்த உரிமைகள் நசுக்கப்பட்டுவிடுகின்றன.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்தியத் துணைக் கண்டத்தில் காங்கிரஸ் போராடியபொழுது, இந்த அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகப் பாடுபட்டது. அந்தக் காலத்தில் பல தலைவர்கள்—வீரர்கள் நாட்டின் உரிமைகளைக் காக்கவே போராடினர்; கஷ்ட நஷ்டங்களை ஏற்றனர். அடக்குமுறையை எதிர்த்து, எழுந்த உரிமைப் போராட்டங்களில், தங்கள் இரத்தத்தையும், உயிரையும் காணிக்கையாகத் தந்தனர் பலர். திருப்பூர் குமரன் உயிரை நீத்ததும், தூத்துக்குடி சிதம்பரம் செக்கிழுத்ததும், பகவத் சிங் தூக்கில் தொங்கியதும், ஆயிரக்கணக்கான வீரர்கள்—நல்லவர்கள் வெஞ்சிறைகளில் வாடியதும் ஜனநாயகத்தின் அடிப்படை உரிமைகள்—பேச்சுரிமை, எழுத்துரிமை இவைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். இவ்வாறு உரிமைப் போராட்டங்களை நடத்துவதில் காங்கிரஸ் கட்சி முனைந்திருந்தது.

ஆனால், இந்தியத் துணைக்கண்டம் விடுதலை உரிமை பெற்றதும், 'சுதந்திர ஜனநாயகக் குடியரசு' ஆட்சி மலர்ந்ததும் காங்கிரசின் போக்கு வேறுபட்டது. ஒரு காலத்தில் எழுத்துரிமை, பேச்சுரிமைகள் வேண்டுமெனப் போராடிய காங்கிரசே, அந்த உரிமைகளை அடக்குவதில், முன்பிருந்த ஏகாதிபத்தியத்தையும் மிஞ்சும் விதத்தில், ஆரம்பித்தது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த காங்கிரஸ், ஜனநாயக உரிமைகளை அழித்தொழிக்கும் பாதுகாவல் சட்டங்களைப் பிரயோகித்து அடக்குமுறை ஆட்சியைத் தொடங்கியது. மாமியார் செய்த கொடுமைகளை எதிர்த்து நிற்கும் மருமகள், பின், தான் ஒரு மாமியாரானதும் தனது மருமகளை ஆட்டிப் படைக்க முனைவதுபோல, முன்பு அடக்குமுறைச் சட்டங்கள் கூடாதென எதிர்த்துப் போராடிய காங்கிரஸ், தான் அதிகாரத்திலமர்ந்ததும் அடக்குமுறைகளை — முன்னைவிட அதிகக் கடுமையும் கொடுமையும் நிறைந்த அளவில் தனக்குக் கீழ்ப்பட்டிருக்கும் குடிமக்களிடம்—தன்னை எதிர்த்துப் பேசும் எதிர்க்கட்சிகளிடம்—பேச்சுரிமை, எழுத்துரிமைகளுக்காகப் போராடுபவர்களிடம் காட்டுகிறது.

காங்கிரசைப் பிடித்துள்ள எதேச்சாதிகாரப் போக்கு—அதிகார போதை எதிர்க்கட்சியினரிடம் மட்டுமல்ல, தன்னைச் சார்ந்தவர்களிடமும் பாயத் தொடங்கியுள்ளது. அதன் அறிகுறிதான், அண்மையில் கல்யாணி காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றிய ஒரு தீர்மானமாகும். அதன்படி, காங்கிரஸ்காரர்கள் மாறுபட்டக் கருத்துக்களை வியாதத்தின் மூலம் வெளிப்படுத்தக் கூடாது என்று தலைமைப் பீடம் எச்சரித்துள்ளது.

சர்வாதிகாரப் போக்குடைய நாடுகளிலும், கட்சிகளிலும் மட்டுமே இத்தகைய தீர்மானங்கள் அமுலாக்கப்படுகின்றதே யன்றி, ஜனநாயகப் பண்பில் நம்பிக்கையுடைய கட்சிகள் வேறுபட்ட கருத்துகள் தோன்றினால் அவற்றை வரவேற்கவே முன்வரும். ஆனால் எதிர்க்கட்சியினர் மீதும், உரிமைக் குரல் எழுப்புவோர் மீதும் தமக்குள்ள அரசியல் ஆதிபத்தியத்தின் மூலம் அடக்குமுறைச் சட்டங்களை வீசிப் பழக்கம் பெற்றுவிட்ட காங்கிரஸ் தலைமை இப்பொழுது தனது கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது, அத்தகைய அடக்குமுறையை — வாய்ப்பூட்டுச் சட்டங்களை வீசத் தொடங்கிவிட்டது. இது, ஜனநாயகப் பண்பாடு காங்கிரசில் குன்றி, அதிகார வெறியும், அடக்குமுறைக் கோலமும் அதிகரித்து வருவதையே குறிக்கும். வளர்ந்துள்ள இந்த நிலை, மற்றக் கட்சியினரைவிட, உண்மையான காங்கிரஸ் அன்பர்களுக்கே கவலையையும், கவனத்தையும் உண்டாக்குவதாகும்.

சி. ஆர். பதவிச் சீட்டு கிழியும் நாள் குறித்தாகிவிட்டது

—[o]—

ராஜா சர். முத்தையாவிற்கு அப்பதவி கிடைக்குமென யூகம்

சுப்பிரமணியத்திற்கும் - பக்தவத்சலத்திற்குமிடையே பதவிப் போட்டி!

கோவை, ஜன. 27—

"சென்னை சர்க்காரின் வரவு-செலவுத் திட்டம் சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, இராஜகோபாலாச்சாரியார் விலகுவதென்பது உறுதியாகிவிட்டது."

"இராஜகோபாலாச்சாரியார் வீற்றிருக்கும் பிரதமர் பதவிக்கு, காங்கிரசில் உள்ள எல்லாக் கோஷ்டியினரும் ஒப்புக்கொள்ளும் தகுதி வாய்ந்த ஒருவராக உள்ள ராஜா சர். முத்தைய செட்டியார் அவர்கள் இடம் பெறக்கூடும் என்று இங்குள்ள தமிழ் நாடு காங்கிரஸ் வட்டாரத்தினர் கருதுகின்றனர்."

"இராஜகோபாலாச்சாரியார் விருப்பத்திற்கே விடுவதாக இருந்தால் நிதி அமைச்சர் சுப்பிரமணியத்தையே, தமக்குப் பதில் தேர்ந்தெடுப்பார் என்று நம்பப்படுகிறது. ஆனால், இது விஷயத்தில் ஆச்சாரியார் கருத்தறியப்படுமா என்பது ஐயத்திற்கிடமாயுள்ளது. தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரான காமராஜ நாடார் அவர்கள் முடிவுதான், இது விஷயத்தை நிர்ணயிக்கத் தகுந்ததாக இருக்கக்கூடும்."

"இராஜகோபாலாச்சாரியாரைத் தொடர்ந்து, பிரதமராகக்கூடிய ஒரு வாய்ப்பு, விவசாய அமைச்சராக இருக்கும் பக்தவத்சலம் அவர்களுக்கும் இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது."

—மேற்குறித்தவாறு, பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தியாளர், அந்த ஏட்டிற்கு ஒரு செய்தியை அனுப்பி இருக்கிறார்.

இந்தியாவின் கைத்தொழில் உற்பத்தி

சென்ற ஆண்டில் குறைந்துவிட்டது

கல்கத்தா, ஜன. 27—

சென்ற ஆண்டு கைத்தொழில் உற்பத்தி இதற்கு முந்திய 2 ஆண்டுகளைவிட குறைந்துவிட்டது.

5 ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சுமார் 12 கைத்தொழில்களில் உற்பத்தி குறைந்துவிட்டன. பருத்தித் துணி, சிமெண்ட் இவ்விரண்டைத் தவிர, மற்ற தொழில்களில் உற்பத்தி ஒரே அளவில் இருந்திருக்கிறது அல்லது குறைந்திருக்கிறது.

தொழில் தகராறுகள், போக்குவரத்துக் கஷ்டங்கள், மூலப்பொருள்கள் கிடைக்காமை ஆகியவைகள்தான் உற்பத்தி குறைவுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன.

பருத்தி துணித் தொழிலில் எதிர்பார்த்ததற்கு மேலேயே உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. பருத்தி சப்ளையில் திருப்திகரமான நிலைமை இருந்ததே இதற்குக் காரணம்.

சணல் தொழிலில், உற்பத்தி குறைந்துள்ளது. பான்பூர் தகரம், இரும்பு, எஃகுத் தொழிலில் உற்பத்தி குறைந்துவிட்டது. சிமெண்ட், உப்பு ஆகியவை சென்ற ஆண்டில் அதிக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இஞ்சினியரிங் தொழில்களில் ஓரளவு அபிவிருத்தி காணப்பட்டது.

இஞ்சி, மிளகுக்கு சர்டிபிகேட்!

சென்னை, ஜன. 27—

இஞ்சி, மிளகு ஏலக்காய் ஆகியவைகள், இனி நல்ல ரகமானவை என்பதை அறிவிக்கும் 'அக்மார்க்' முத்திரை குத்தப்பட்டு மார்க்கெட்டுகளுக்கு அனுப்பப்படும்.

"ஆரியமாயையும், அந்நியர் ஆட்சியுமே தமிழ் நூல்களை அழித்தன"

"வடமொழி ஆதிக்கத்தை தமிழர்கள் எதிர்த்தே தீருவர்"

பேராசிரியர் கார்மேகனார் பேருரை

மதுரை, ஜன. 27—

"தமிழ் நூல்கள் அழிந்ததற்கு இரு காரணங்கள் உள்ளன; ஒன்று, தமிழை அறியாத பிறநாட்டார் ஆட்சி செலுத்தியது; மற்றொன்று கடற்கோள்கள்.

"நமது முன்னோர்கள், பதினெட்டாம்பெருக்கு என்ற முறையில், நமது பழம்பெரும் நூல்களை ஆற்றிலே போட்டு இலக்கியங்களை இழந்துவிட்டனர் இந்த மூடப் பழக்கத்தின் காரணமாக நமது பழம்பெரும் நூல்கள் பல அழிந்து போயின.

"வடமொழியை ஆட்சி மொழியாக்க சிலர் முயற்சிக்கின்றனர்; இம்முயற்சியைத் தமிழர்கள் எதிர்த்தே தீருவார்கள்."

—இவ்வாறு, பேராசிரியர் கார்மேகனார் அவர்கள், தியாகராசர் கல்லூரி இளங்கோ மன்றத்தின் சார்பில், 21—1—54-ல், நடைபெற்ற முத்தமிழ் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:-

"தமிழ் என்றால், மென்மை—இனிமையானது என்று பொருள்; இப்படிப்பட்ட மொழி இன்று அரசியல் மொழியாக இல்லை.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:—

"எம்மொழியிலும் இல்லாத இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளையுடையது தமிழ் தமிழ்மொழியில் பதினாறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நூல்கள் வெளிவந்திருக்கின்றன. மொழி ஒன்றுதான் மனிதனை விலங்கினத்திலிருந்து பிரிக்கிறது. மொழி வழக்கு இல்லாது போனால் மனிதனும் விலங்கைச் சாருவான்."

"மதுரையில் 'சங்கம் வைத்து தமிழைப் போற்றினர்கள். கலந்தா போன்ற பல்கலைக் கழகம் தோன்றுமுன்பே பாண்டிய மன்னர்கள் மதுரையில் இயல், இசை, நாடகம் முதலியவைகளுக்கு தனித் தனி சங்கங்கள் வைத்து வளர்த்து வந்தனர். சிலப்பதிகாரத்தில் இயல், இசை, நாடகம் ஒருங்கே அமைந்துள்ளது." என்றார்.

பாகிஸ்தான் அணைத் திட்டம்

அமெரிக்க நிதி உதவி

கராச்சி, ஜன. 27—

பாகிஸ்தான் அணைத் திட்டங்களுக்கு உதவி அளிப்பதற்கான ஒரு உடன்படிக்கை பாகிஸ்தானுக்கும்—அமெரிக்க அயல்நாட்டு நடவடிக்கை நிர்வாகத்திற்குமிடையே கையெழுத்தாகியிருக்கிறது.

சிட்டகாங்கில், ரசாயன எரு உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுத்துவது, மற்றும் மூன்று—இதர தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது சம்பந்தமாக நான்கு உடன்படிக்கைகளும் கையெழுத்தாகியுள்ளன. பயிர்களை நாசப்படுத்தும் பூச்சிகளை ஒழித்துக்கட்ட மூன்று லட்சம் டாலர்களையும் அமெரிக்கா பாகிஸ்தானுக்குக் கொடுத்துதவும்.

இந்தோனேஷிய மக்கள் தொகை

8 கோடி என அறிவிப்பு

ஜகார்தா, ஜன. 27—

இந்தோனேஷியாவின் மக்கள் தொகை 7,83,88,700 என்று 1952ம் ஆண்டு ஜனக் கணிதப் புள்ளி விபரங்களிலிருந்து தெரிய வருவதாக அறிவிக்கப்படுகிறது.

5 கோடி பேர்களுக்கு மேல் ஜாவாவில் வசிக்கின்றனர்; 1 கோடி 10 லட்சம்பேர் சுமத்ராவிலும், 35 லட்சம் பேர் போர்னியோவிலும், 60 லட்சம் பேர் செலிபிசிலும் வசிக்கிறார்கள்.

தொழிலாளர்களின் திருமணங்கள்

சடங்குகளைக் குறைக்க ஏற்பாடு

லண்டன், ஜன. 27—

போலிஷ் தொழிலாளர்களின் திருமணங்களில் உள்ள ஏராளமான சடங்குகளைக் குறைத்துவிடவும், திருமணம் சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளைச் செய்யவும் திருமணக் கூட்டுறவு சங்கங்கள் போலந்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ தி. மு. கழகங்கள் துவக்கம் ★

படித்துறை

23—1—54-ல், தோழியர் எல். எம் லட்சுமி தலைமையில் தோழர் மா. மாணிக்கம் கழகத்தைத் துவக்கி வைத்தார். தோழர்கள் வை. வீழிநாதன், வானமாமலை, வில்லவன் கோதை, பரணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். விழா இறுதியில் சிறுவர்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டது. பின்னர், தோழர்கள் இரா. துரை செயலாளராகவும், வி. டி. சாது துணைச் செயலாளராகவும், தோழியர் இரா. ராஜேஸ்வரி பொருளாளராகவும், செயற்குழுவிற்கு 5 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எலுகாம்வலசு

13—1—54-ல், தோழர் கு. நாச்சிமுத்து தலைமையில் தி. மு. கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர்கள் செ. பழனிச்சாமி செயலாளராகவும், செ. இராமசாமி துணைச் செயலாளராகவும், இரா. திருமலைசாமி பொருளாளராகவும், க. இராமசாமி விளம்பர உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் ந. பழனிச்சாமி, மா. பழனிச்சாமி, ப. கருப்பண்ணன், ப. மாரப்பன், பெ. அங்கப்பன், எல்லை திருமலைசாமி, பி தங்கவேலு ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெத்தநாய்க்கன்பட்டி

4—1—54-ல், பொதுச் சாவடியில், தோழர் கா. நாச்சிமுத்து தலைமையில், கழகத் துவக்க விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது கீழ்கண்டவர்கள் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—கா. நாச்சிமுத்து: செயலாளர்; ம. சண்முகம்: துணைச் செயலாளர்; க. சம்பத்: பொருளாளர்; கா. முத்துசாமி: மாவட்டப் பிரதிநிதி; செயற்குழு உறுப்பினர்கள்: கு. மல்லியசாமி, ஏ. சிற்றரசு, சி. கருப்பன், ம. பரதன்.

தெள்ளூர்

16—1—54-ல், இவ்வூரில் கிளைக் கழகம் துவக்கப்பட்டது. தோழர் சொம்பு நயினர் தலைமையில், தோழர்கள் பேரூர் கே. சுப்பிரமணியம், எ. கருத்தோவியன், டாக்டர் பி வேதாந்தம், எல். எச். எம்., எம். சாந்தி நாதன், குப்புசாமி, முத்துசாமி ஆகியோர் பேசினர்; தோழர் டி. எம். தருமராசன் நன்றி கூறினர்.

கிரேய்க்மோர் எஸ்டேட்

15-1-54 காலை 8-30 மணிக்கு இங்கு கழகம் துவக்கப்பட்டது. தோழர் ப. அடைக்கலம் கொடி ஏற்றிவைத்தார். மாலை 3 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு, அண்ணா நிடலில் முடிவடைந்து, அங்கு தோழர் ஆ ஆ சிதம்பரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிறை மீண்ட தோழர்கள் படத்தைத் தோழர் ஞானசேகரன் திறந்து வைத்தார் தோழர்கள் கதிர்வேல், ப. அடைக்கலம் ஆகியோர் பேசினர். தோழியர் லோகம்பாள் பண் பாடினர். தோழர் கே. பி. பெரியசாமி மேஸ்திரி இனிப்பு வழங்கினர். பின்னர், செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ப. அடைக்கலம்; துணைச் செயலாளர்: கதிர்வேல்; பொருளாளர்:— ஞானசேகரன்; செயற்குழு உறுப்பினர்கள்: பொன்னுசாமி, நாகன், அம்மாசி, ஆ. பூ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணியன், பி. பிச்சைமுத்து, காளியப்பக் கவுண்டர், மயில்சாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோவிலடி

14—1—54 மாலை 6 மணிக்கு இவ்வூரில் தோழர் க. முருகையனார் தலைமையில், திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் அ. பெ. தர்மலிங்கம் கழகத்தைத் துவக்கி வைத்தார். பின்னர், 7 மணிக்கு ஊராண்மைக் கழக அலுவலகத்தின் முன் தோழர் முருகையனார் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் உரைக்குப் பின் தோழர்கள் கே. என். சுந்தரம், ம தமிழ்ச்செல்வன், ம. கதிரேசன், அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசினர். தோழர் ம. கதிரேசன் நன்றி கூறினர்.

* * *

30—12—53 மாலை 5 மணிக்கு தோழர் ச. இராமசாமி தலைமையில் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: சு சி வயலரசன்; செயலாளர்: இரா. ஆதிராசு; பொருளாளர்: ச. இராமசாமி; மாவட்டப் பிரதிநிதி: மா. தமிழ்த்தாசன்; விளம்பர உறுப்பினர்: இரா. சோமசுந்தரம்; நிர்வாகக்குழு உறுப்பினர்கள்: கா. பெரியசாமி, இரா. திரவியன், அ. இராசு, கோ. வைவராசு, மு. திருவரங்கம், சி மாணிக்கம்.

வேடப்பட்டி

14—1—54-ல், தோழர் என். கலிங்கன் கழகத்தைத் துவக்கி வைத்தார். தோழர் சங்கரலிங்கம் தலைமை தாங்கினர். தோழர் கலிங்கன் கொடி ஏற்றி வைத்து, விளக்கவுரை ஆற்றினர். தோழர்கள் தேவன், சு. வே. அண்ணாமலை ஆகியோர் பேசினர்.

நாப்பாய்—நீலகிரி

14—8—53-ல், இங்கு தி மு கழகம் துவக்கப்பட்டது. தோழர் ஆர். சின்னையன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

ஆர். தங்கவேல்: செயலாளர்; எஸ். சின்னே: துணைச் செயலாளர்; ஜோசப்: பொருளாளர்; கே. வி. மணி: விளம்பர உறுப்பினர்; ஆர். லிங்கப்பன்: துணை விளம்பர உறுப்பினர்; ஜி துரையாசு: மாவட்டப் பிரதிநிதி; கே. வி. ராஜு, சி பச்சமுத்து, ஆர். ராஜு, முத்தரசு, கணபதி, தங்கவேல், கே வீரபாண்டியன், கே. புரட்சிமணி, ராமையா, சி. ராமன், பி. ஏ. ராஜு, முனுசாமி, செல்லமுத்து, ரெங்கன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்.

பாரப்பட்டி

இவ்வூரில், 16—1—54-ல், துவக்க விழா நடைபெற்றது. அதுபோது, தோழர் கே. சுப்பையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கீழ்க்கண்டவர்கள் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—என். முத்து: செயலாளர்; என். பெருமாள்: துணைச் செயலாளர்; எம். ஆர். எஸ். ராமு: பொருளாளர்; என். ராமசாமி, பி. கே. மாயன்: விளம்பர உறுப்பினர்கள்; வி. பிச்சை, எம். எம். ராமசாமி: குழு உறுப்பினர்கள்: எம். தங்கவேலன், என். எம். ஆர். சாமி, எம். நாகையப்பா, தா. பெருமாள், சி. சிவன்காளை, நா. நாருயணன், பி. பொன்னையா, கு சின்ன, வெ தங்கவேலு, நா. நாகு, வே. மாரிமுத்து.

தமிழகமெங்கணும் — திராவிடர் திருநாள்

உடதூர்

அ கொல்லப்பட்டி புதூர் தி மு கழக சார்பில், 15—1—54 அன்று தோழர் குமாரசாமி தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது அதுபோது, 10-ஆதை காளைகளைப் பூட்டிய வண்டியில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை உருவப் படத்தை அலங்கரித்து கழகத் தோழர்கள் கொடிகளுடன் அணிவகுத்து, ஊர்வலமாக அ. கொல்லப்பட்டி, புதூர், பழைய ஊர், ஆகிய ஊர்களின் வழியாக நடத்திச்சென்று மாலை 6 மணிக்கு வ. உ சி. திடலில் வந்து சேர்ந்தனர். அங்கு தோழர் அ. வரதப்பனார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. ராமன், மு. அரங்கன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் அ. கோபால் நன்றி கூறினர்.

வில்லாபுரம்

இல்லையாடி வள்ளியம்மை நினைவுப் படிப்பகத்தின் முன், தோழர் தாமரைச் செல்வனால் கொடியேற்றப்பட்டு, சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. அன்று மாலை 5 மணிக்கு பொங்கல் வினியோகிக்கப்பட்டது.

தேனி

15—1—54-ல், தி. மு. கழகச் சார்பில், மேற்குச் சந்தையில், தோழர் பி. என். செல்வாவின் இன்னிசை மதுரை சி. ஆர். சௌந்திரராசன் குழுவினருடன் தோழர் கே. சாகர் மைதீன் தலைமையில் நடைபெற்றது.

பீமநகர்

தோழர் பாலசந்திரா கழகக் கொடியேற்று விழாவாற்றிய பின், குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டது. பிப்ரவரி 20-ம் தேதிக்குள் கழக 2-வது ஆண்டு விழாவினை நடத்துவ தெனவும், பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களிடம் தூத்துக்குடி வழக்கு நிதிக்கு ரூ. 100 தருவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

சமயநல்லூர்

தி மு. கழகச் சார்பில். போட்டி பந்தயங்கள் நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு மாலை 7 மணிக்கு தங்கச்சாமி அவர்களால் பரிசு வழங்கப்பட்டது. தோழர் மலைராசன் சொற்பொழிவாற்றினர்.

ஆரப்பாளையம்

15—1—54ல், தி. மு கழகச் சார்பில், விழாவும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது தோழர் சோ. அய்யம்பெருமாள் தலைமை தாங்கினர். தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் கழகக் கொடி ஏற்றிவைத்துப் பேசினர். தோழர் என் முத்து. பேசியபின், தோழர் என். மாதவன் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்துப் பேசினர்.

சயன் — பம்பாய்

16—1—54ல், தி மு கழகச் சார்பில், விழாப் பொதுக் கூட்டம், கோலிவாடா ரெவிலி கேம்ப் மைதானத்தில் மாலை 7 மணியளவில் தோழர் புதுவை என். எஸ். மணி தலைமையில் நடைபெற்றது; தோழர் அ. அப்துல் ரசாக் இயக்கப்பண் பாடினர்; தோழர் கே. என், வரதராசன் வரவேற்புரையாற்றினர்; தோழர்கள் பி. கே. கோவிந்தசாமி, எஸ் விக்டர்ராஜ், ஏ என். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு 9-மணிக்கு இராமர் கோவில் திடலில் தோழர் ஆர். கே. பழனிச்சாமி தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் ஏ. என். ராமசாமி, பி. கே. கோவிந்தசாமி, கே. என். வரதராசன், எஸ். இராசன் ஆகியோர் கழக வளர்ச்சி பற்றிப் பேசினர்.

இந்தியாவில் முதலீடு செய்ய ஜப்பான் உத்தேசம்

உலக பாங்கியிலிருந்து கடன் வாங்கித் உதவவும் தயாராக இருக்கிறதாம்!

டோக்கியோ, ஜன. 27—

இந்தியாவின் உப்புத் தொழில், பீகார்—ஒரிஸா—கோவா ஆகிய வைகளிலுள்ள இரும்புத்தொழில்களில் முதலீடு செய்ய ஜப்பான் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உப்பு, பாக்ஸைட், இரும்பு, நிலக்கரி, செம்பு ஆகியவைகள் அதிகமாக உற்பத்தியாகும், அவைகளுக்காக, தான். டாலர் நாடுகளை எதிர்பார்க்க வேண்டாம் என்பதே ஜப்பானின் எண்ணம். ஆகவே, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்த தாதுப் பொருள்கள் அபிவிருத்திக்கு உதவ, உலக பாங்கியிடமிருந்தும் கடன் வாங்கித்தர ஜப்பான் தயாராக இருக்கிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன், கூட்டாக சில தொழில்களை ஆரம்பித்து நடத்தவும், ஜப்பான் முதலாளிகள் திட்டம் போட்டுள்ளனர்.

செஞ்சீன தேர்தலுக்குத் தயாராகிறது

—(:)—

நான்கு ரகத்தினர் வோட்டுரிமையை உபயோகிக்கத் தடை

ஹாங்காங், ஜன. 27—

சீனாவில், தேர்தல்களுக்கான ஆயத்தங்கள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேர்தல்களில், எதற்காகச் சிரத்தை காட்ட வேண்டும் என்பதை விளக்கும் படங்கள் அங்கங்கே காட்சியளிக்க ஆரம்பித்துள்ளனவாம்.

வாக்காளர்கள், அபேட்சகர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். நான்கு ரகத்தினர், வோட்டுரிமையை உபயோகிப்பதிலிருந்து தடை செய்யப்பட்டிருக்கின்றனர்.

புகார்கள் உள்ள நிலச்சுவான்தாரர்கள். பிற்போக்காளர்கள், அரசியல் குற்றவாளிகள், பைத்தியக்காரர்கள் ஆகிய நான்கு ரகத்தினரும் வோட்டுரிமையை உபயோகிக்கலாகாது தேர்தல் கமிட்டிபொன்று அறிவிப்பட்டுள்ளது.

கிராமம், ஜில்லா ஆகியவைகளுக்கான தேர்தல்கள் கோடியான வோட் முறை மூலம் நடைபெறும்! மாகாண சர்க்கார், மத்திய சர்க்கார் ஆகியவைகளுக்கான தேர்தல்கள் மறைமுக வோட் முறை மூலம் நடத்தப்படும்.

திருப்பத்தூரில் ஐவர்

—o—

வரவேற்பும், தூத்துக்குடி நிதியளிப்பும்

7-2-54ல் திருப்பத்தூர் (வ. ஆ.) தி. மு. கழகச்சார்பில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை. இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகிய ஐவருக்கு வரவேற்பு நடத்தப்படும்.

அதுபோது தூத்துக்குடி நிதிக்கு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் பண முடிப்பு தரப்படும்.

★

திருப்பத்தூர் (வ. ஆ) தி. மு. கழக தோழர்களுக்கு "7—2—54 அன்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, மற்றும் தலைவர்கள் நால்வருக்கும் இங்கு வரவேற்பளித்து. தூத்துக்குடி நிதிக்கு பண முடிப்பு அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. நிதி வசூல் பொறுப்பை தோழர்கள் இ எஸ். இராகவனார் எம். எல். ஏ., ஜி. சுவாமி நாயுடு பி. ஏ., பி. எல், க. நெடுஞ்சோழன், நகரசபை தலைவர் வி. என். வீரபத்திரன் ஆகியோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். மற்றும் இயக்கத் தோழர்களும நிதி வசூலிக்க வருவார்கள். தோழர்கள் அனைவரும் இயன்ற பொருளுதவி செய்து நிதிப்பையை நிரம்பித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்," என்று, தோழர் க. நெடுஞ்சோழன் அறிவிக்கிறார்.

சூலூரில் தோழர் நெடுஞ்செழியன்

—:—

வரவேற்பும் பொதுக்கூட்டமும்

9-1-'54 சனி மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். என். அற்புதசாமி தலைமையில்: தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்புப் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, பொதுக்கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான தொகை ரூ. 6-4-6; மில் சங்க தொழிலாளர் மூலம் ரூ 2—5—9; ராசிபாளையம் தி வி. க. படிப்பகம் ரூ 1; சூலூர் ரன்னிங் சாகர் புட்பால் டீம் 0—8—0; அன்றிரவு நடைபெற்ற நாடகத்தின் மூலம் ரூ. 65, சுல்தான் பேட்டை தி. மு. கழகச் சார்பில் ரூ. 10; ஆக மொத்தம் ரூ 85—2—3-ம், தூத்துக்குடி வழக்கு நிதிக்காக தோழர் நெடுஞ்செழியன் வசம் ஒப்படைக்கப்பட்டது.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம்

22—1—54 இரவு 8 மணிக்கு கழக அலுவலகத்தில் நடந்த பொதுக் கமிட்டிக் கூட்டத்தில் தேர்தல் விஷயமாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது:—

1. வருகிற தேர்தலில் கட்சி ரீதியாக ஒரு அபேட்சகருக்கும் வேலை செய்யக்கூடாது; ஒவ்வொரு தொகுதியிலும் நிற்கும் கட்சிகளில் முற்போக்குக் கட்சி அபேட்சகருக்கு வோட்டு அளிக்க வேண்டும்.

2 பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களை அழைத்து வரவேற்புக் கூட்டமும், தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்பு விழாவும் நடத்தவேண்டும்.

நிதி அளிப்பு விழாவிற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தோழர் எ. குமாரவேல் அவர்களைக் கன்வீனராகக் கொண்ட கீழ்க்கண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டது:— தோழர்கள்: வி. குமரேசன், என். குற்றாலிங்கம், சு. வள்ளியப்ப பெருமாள், என். கோபாலகிருட்டிணன், வி. எஸ். இரத்தின பாண்டியன், எம். இராஜகோபால், பி நடராஜன், வி. சுப்பிரமணியம்.

தாய் மொழிக்கு ஆக்கந்தேட மாணவர்களே சிறந்தவர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

துக்கும் மேலாக, நாம் ஒருவரை யொருவர் சந்திக்கும் நேரத்தில் தமிழிலே அளவளாவும் சின்னஞ் சிறு பண்பு கூட நம்மிடையில் கிளை விட்டுச் செழிக்கவில்லை இந்தத் துர்ப்பாக்கிய நிலை தமிழகத்தைத் தவிர்த்த வேறெங்கும் நடைபெற்று வருவதாகவும் எனக்குத் தெரியவில்லை."

"ஒரு படித்த வங்காளி, மற்றொரு படித்த வங்காளியைச் சந்திக்கும்போது, அவன்மொழி தவிர்த்த மற்றைய மொழிகளை அவன் பேசமாட்டான்; வங்காள மொழியில்தான் பேசுவான். ஆந்திரரும் அப்படித்தான். தமிழனோ, அரைகுறையாகவாவது, அந்நிய மொழியொன்றைப் பேசி வைக்காவிட்டால், தன்னுடைய கல்வி அறிவுக்கே களங்கம் நேர்ந்துவிட்டதாக நினைத்துக் கொள்ளும் மனப்பான்மையை மாற்றிக் கொள்ளவில்லை.

"அதிலும், வாணிபத்துறையில் தமிழ் மொழி எவ்வளவு தூரம் மதிக்கப்படுகிறது என்பது, வணிகர்களின் விளம்பரப் பலகையொன்றினாலேயே அறிந்து கொள்ளலாம். வாணிகம் செய்வோரும் தமிழர், வாங்குவோரும் தமிழர்கள், இந்த நிலையில், இருசாராருக்கும் புறம்பான மற்றொரு மொழி எதற்கோ? தப்பித் தவறி, ஒரு சில வணிகர்கள் தமிழிலேயே விளம்பரப் பலகை தொங்கவிட்டிருந்தாலும், அந்தப் பலகையிலிருக்கும் தமிழ் வாக்கியங்கள் பரிதாபப்படக் கூடியவைகளாக இருக்கின்றன. 'வல்லினம்', 'மெல்லினம்', 'இடையினம்' வேற்றுமைகளைப் பொருட்படுத்தாத சமரச மனப்பான்மையில், அந்தப் பலகைகள் எழுதப்பட்டு விடுகின்றன!

"20, 25 ஆண்டுகளுக்கு முன் ஜப்பான் நாட்டிலும் இது போன்ற நிலை இருந்தது. இலக்கணத்துக்கு மாறுக, தவறுடன் எழுதப்பட்டிருக்கும் பலகைகளைத் திருத்தி எழுதி மாட்ட வேண்டுமென்று, தங்கள் மொழியில் அக்கரை கொண்ட ஜப்பானிய இளைஞர்கள், ஒரு குறிப்பிட்ட காலவரையுடன் கூடிய அறிக்கையொன்றை வெளியிட்டனர். காலவரையறை கடந்தும் திருத்தப்படாத பலகைகளைத் தாங்களே எடுத்துக் கொண்டு போய், திருத்தி எழுதிவர்து மாட்டிவிட்டனர்.

"அதேபோல், ஜப்பானிய இளைஞர்கள் முறையையே பின்பற்றுமாறு நான் சொல்வதாக நினைத்துவிட வேண்டாம். அப்படிப்பட்ட கெட்ட பெயர் எனக்கு ஏராளமாகி உண்டு இதைக் குறிப்பிட்டுச் சொல்வதின் காரணம், ஜப்பானிய இளைஞர்களுக்கு ஏற்பட்டது போன்ற மொழி ஆர்வம் இங்குள்ள இளைஞர்களுக்கும் ஏற்பட வேண்டும் என்பதேயாகும்.

"சூதுக்காரர்கள் செய்த சூழ்ச்சிகள் காரணமாக, நமது இனம் மங்கிவிட்டது என்பதை, இன்று எல்லோரும்—குறிப்பாக இளைஞர்கள் தெரிந்து கொண்டார்கள். தமிழ்நாட்டு இளைஞர்களிடையே, இன்று கூட்டப்பட்டிருக்கும் தமிழ் விழா நிகழ்ச்சியில காணப்படும் ஆர்வத்தைப் போலவே ஆந்திர நாட்டுச் சிறார்களிடத்தும் காணப்படுகிறது: கன்னட இளைஞரும் முனைந்து வேலை செய்கின்றனர்; மலையாளிகளும் பாடுபடுகின்றனர்; அனைவரும் அவரவர்மொழியின் ஏற்றங் குறித்து உழைக்கின்றனர்.

"இதன் பொருள் என்ன? தனது நாட்டில், தன்னுடைய தாய்மொழி தழைக்க வேண்டுமெனப் போராடிக் கொண்டிருப்பதின் நோக்கம் என்ன?

"தனது வளர்ச்சிக்குத் துணையாக நிற்கும் தாய்மொழியின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையிடும் ஏதோ ஒரு சக்தி இருந்து வருகிறது; நியாயமான வளர்ச்சியுறுமல் தேங்கிப் போவதற்கான கோளாறு ஏதோ ஒன்று இருந்து வருகிறது; களைய எறியப்படவேண்டிய குறைபாடு எங்கோ இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார்கள் என்பதைத் தவிர, வேறென்ன பொருள் கொள்ள முடியும்!

"குறைபாடுகள், முட்டுக்கட்டைகள், கோளாறுகள் இளைஞர்களுக்குத் தெரியத் தொடங்கி விட்டன. தாங்கள் தெரிந்து கொண்ட அளவு, மற்றவர்களுக்கும், இதுபோன்ற விழாக்களின் வாயிலாக அறிவிக்கவும் தொடங்கி விட்டனர்.

"இதுபோன்ற விழாக்களை நடத்துவதன் நோக்கத்தை நல்ல முறையிலே நாட்டில் செயல்பட வைக்குமாறு மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், மொழிச் சீர்திருத்தம் ஆபத்துகள் நிறைந்தது என்பதையும் எச்சரிக்கிறேன்.

"மொழிச் சீர்திருத்தம், சமுதாயச் சீர்திருத்தத்தின் ஒரு கூறு. அரசியல் கிளர்ச்சியால், ஒருநாட்டை உருவாக்கலாம்; ஆட்சி முறையை மாற்றி யமைக்கலாம். ஆனல், சமுதாயச் சீர்திருத்தத்திலே ஒரு கோணத்தை அசைத்துக் கொடுப்பதானாலும், பலப்பல பயங்கர விளைவுகளுக்கு உள்ளாகித் தீர வேண்டும் ஏச்சுப் பேச்சுக்களைத் தாங்கிக் கொள்ள வேண்டும். எதிர்பாராத இன்னல்களைத் தாங்கிக் கொள்ளும் நெஞ்சுறுதி வேண்டும். எதற்கும் அஞ்சாத உள்ள உறுதியுடன், நாம், இந்த நாட்டின் எதிர்கால வாழ்வுக்கான நல்ல பாதையை அமைக்க முயற்சிக்க வேண்டும்.

"கொந்தளிக்கும் கடலில் சிக்கிய மரக்கல நிலையில் இருக்கும் நமது இன்றைய வாழ்க்கைத் திரைகளிலிருந்து போராடிக் கரை சேர்வோம்; பூந்தோட்டங்கள் காண்போம்; புது வாழ்வு பெறுவோம்; பொலிவுற்றுத் திகழ்வோம்."

முல்லைவாங்கலில் பொதுக் கூட்டம்

23—1—54-ல் தோழர் எஸ். டி. வானமாமலை தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வை. வீழகாதன், மா மாணிக்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கருவுற்ற கன்னிப் பெண்ணை கொன்ற தந்தை

உலகப் பழிப்புக்கு அஞ்சி கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை

"தண்டனையை நிர்ணயிப்பதென்பது சிக்கலான விஷயம். பணத்தாசையாலோ பழிவாங்கும் நினைப்பாலோ வழக்கமாக நடைபெறும் கொலை யொன்றதல்ல இது. கொலை கொடுமையானதாக இருந்தாலும், அதுவும் தனது கருவுற்ற மகளைக் கொலைசெய்து இருந்தாலும், குற்றவாளி யொதுமக்கள் பழிச்சொல்லுக்கு அதிக அளவு இடம் கொடுத்து விட்டவராக இருக்கிறார் என்பது வெளியாகி யுள்ளது எனவே தூக்கு தண்டனை விதிக்க வேண்டியது அவசியமில்லை என்று கருதி ஆயுள் தண்டனை விதிப்பதே நீதியை நன்கு நிறைவேற்றினதாகும் என்று நம்புகிறேன்."

—இவ்வாறு, மணமாகாத கன்னிப் பெண்ணாக இருக்கும்போதே கருவுற்ற தனது பெண் வேதவல்லியை, கொடுவாளால் வெட்டிக் கொன்ற சத்தியவாடி சிற்றூரைச் சேர்ந்த பெண்ணின் தந்தை நாராயணசாமிக் கோனாரை தண்டித்த கடலூர் செஷன்ஸ் நீதிபதி தனது தீர்ப்பில் மேல் குறித்தவாறு குறிப்பிட்டார்.

இந்திக்கு ஆக்கந்தேட புதிய சதி

—[o]—

டில்லி பீடத்தின் பரிசுத் திட்டம்

புதுடில்லி, ஜன 24—

எல்லா இந்திய மொழிகளிலும், இந்தியில் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்காக இந்திய சர்க்கார் ஒரு திட்டத்தை ஆரம்பித்துள்ளனர். எழுத்தாளர்களும் பிரசுர கர்த்தாக்களும் தங்களது இலக்கிய புத்தகங்களை அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கும்படி கோரப்படுகின்றனர். முக்கியத்துவம் உள்ளதாகக் கருதப்படும் புத்தகங்கள் அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொரு புத்தகத்திலும் 1000 பிரதிகளை சர்க்காரே வாங்கிக்கொள்ளும். எழுத்தாளர்கள் கையெழுத்துப் பிரதிகளையும் அனுப்பலாமென அறியப்படுகிறது. அங்கீகரிக்கப்படும் புத்தகங்களை எழுதும் எழுத்தாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும். பரிசுத் தொகை ரு. 500 லிருந்து ரு 1000 வரை இருக்கும்

அத்தகைய பகுதியிலுள்ள நல்ல புத்தகங்களை இந்தியில் மொழி பெயர்ப்பதற்கும் ஊக்கம் அளிக்கப்படும். இத்திட்டத்தின் அமலை மேல் பார்வையிட ஒரு குழு நியமிக்கப்படும். அக்குழுவின் மூவர் உத்தியோக சார்பற்றவர்களாக இருப்பர்.

கமிட்டியின் தீர்ப்பு இவ்வாண்டு அக்டோபர் 2ம் தேதி அறிவிக்கப்படும்.

ரஷியாவின் நிகழ்ச்சி நிரல்

நால்வர் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது

பெர்லின், ஜன. 26—

நால்வர் மாநாட்டில், ரஷ்ய அயல்நாட்டு மந்திரி மாலடோவ் நேற்று சமர்ப்பித்த நிகழ்ச்சி நிரலை யு. எஸ். அரசாங்க மந்திரி டல்லஸ் ஏற்றுக்கொண்டார்.

மூன்று மேற்கத்திய வல்லரசுகளின் சார்பாக ரஷியப் பிரேரணையை தான் ஏற்றுக் கொள்வதாக இன்றையக் கூட்டத்தில் டல்லஸ் தெரிவித்தார்.

"சர்வதேச உறவு நிலையில் காணப்படும் நெருக்கடியை தணிப்பதற்கான நடவடிக்கைகளை விவாதித்தல், கம்யூனிஸ்ட் சீனாவையும், கொண்ட ஐந்து வல்லரசு அயல்நாட்டு மந்திரிகளின் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தல், ஜர்மன் பிரச்சினை பற்றியும், ஜெர்மனி பாதுகாப்பு பிரச்னைகளையும் விவாதித்தல், ஆஸ்திரிய ஒப்பந்தம், இவைகள் அடங்கியது தான் மாலடோவ் சமர்ப்பித்த நிகழ்ச்சி நிரல்.

மாலடோவ் சமர்ப்பித்த நிகழ்ச்சிநிரலை தோழர் டல்லஸ் ஏற்றுக் கொண்டார்.

ஐவர் மாநாட்டை கூட்ட வேண்டும்—அதுவும், இவ்வாண்டு மேயில் கூட்டிவிட வேண்டுமென மாலடோவ் கூறியதற்கு, டல்லஸ், அதுபற்றிய பூர்வாங்கத் திட்டத்தை நாளைய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்போவதாகக் கூறினார்.

வேலை நிறுத்தம் செய்வதாக

சுரங்கத் தொழிலாளர் எச்சரிக்கை!

நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் கோரிக்கையில் சர்க்கார் அலட்சியம் காட்டுவதின் எதிரொலி

கல்கத்தா, ஜன. 26—

சுரங்கத் தொழிலாளர்களின் கோரிக்கையான பஞ்சாயத்துக் குழு நியமனத்தை இந்திய சர்க்கார் இதுவரை அலட்சியமாகக் கருதுவதின் காரணமாக, மார்ச் முதல் தேதி முதல் இந்தியத் துணைக் கண்டமுழுதும் உள்ள சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது என்று இந்திய சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்

இந்திய தேசிய சுரங்கத்தொழிலாளர் சம்மேளனத்தின் செயற்குழு இன்று இங்கு கூடியது. பொதுவாக சுரங்கத் தொழிலாளர்களும், குறிப்பாக நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களும், தங்களுடைய குறைகளைக் களைந்து கொள்ள ஒரு பஞ்சாயத்துக் குழுவை உடனடியாக நியமிக்க இந்திய சர்க்கார் முன்வர வேண்டுமென்று இந்திய சர்க்காருக்கு கொடுத்துள்ள கோரிக்கையை நிறைவேற்ற இந்திய சர்க்கார் முன் வராதது பற்றி சம்மேளன செயற்குழு ஆராய்ந்தது.

இந்திய சர்க்காரின் அலட்சியப் போக்கிற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு, அகில இந்திய சுரங்கத் தொழிலாளர் தினமான வருகிற 31-ந் தேதியன்று, சம்மேளனத்துடன் இணைத்துக்கொண்டுள்ள சுரங்கத் தொழிலாளர் ஸ்தாபனம் அனைத்தும் நீடித்த காலவேலை நிறுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக சர்க்காருக்கு அறிவித்து விடுமாறு வேண்டிக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை செயற்குழு தீர்மானித்தது.

மார்ச் முதல் தேதியை பொது வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளுவதற்கான ஆரம்ப நாளாகத் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பு நகரில் திருக்குறள் மாநாடு

ஜனவரி 16, 17, 18-ந் தேதிகளில், மருதானை, ஸாஹிரா கல்லூரி வெளியில், திருக்குறள் மன்றச் சார்பில், திருக்குறள் மாநாடு நடைபெற்றது

16—1—54-ல், மாநாட்டை தோழர் சோ. சிவபாத சுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார். தோழர் ஏ. எம். ஏ. அஸீஸ் தலைமை வகித்து திருக்குறளின் உயர்வை விளக்கிப் பேசினார். தோழர்கள் சி. இராமலிங்கம், க. அன்பழகன் சொற்பொழிவாற்றினர். செயலாளர் நாராயணன் அனைவரையும் வரவேற்றார்.

17—1—54 ஞாயிறு காலை 9 மணிக்கு தோழியர் ருக்மணியின் இசையோடு மாநாடு துவங்கியது. வித்துவான் வ. மு. கனகசுந்தரம் தலைமை தாங்கினார். தோழர்கள் எப். எக்ஸ். சி. நடராசன், மு இராசக்கண்ணனார் சொற்பொழிவாற்றினர். மாலை 4-மணிக்கு தோழியர் விசாலட்சுமியின் குழல் இசையோடு மாநாடு துவங்கியது. தோழர் சிவபாதசுந்தரம் தலைமை தாங்கினார் தோழர்கள் வ. சு. ப. மாணிக்கம், மு. இராசாக்கண்ணனார், க. அன்பழகன் சொற்பொழிவாற்றினர்.

18-1-54 திங்கள் மாலை 5 மணிக்கு காரைக்குடி தோழர் சொ. முருகப்பா தலைமையில் மாநாடு கூடிற்று தோழர்கள் இராசாக்கண்ணனார், வ. சு. ப. மாணிக்கம், க. அன்பழகன் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரையுடன், செயலாளர் தோழர் நா. சே. நாராயணன் நன்றி கூற விழா முடிந்தது.

பம்பாயில் தோழர் சிற்றரசு

தோழர் சி பி. சிற்றரசு அவர்கள், 23—1—54 பிற்பகல் 1 மணியளவில் பம்பாய் தாதர் ரயில்வே நிலையத்தை வந்தடைந்தார் பம்பாய் தி மு க, மாதுங்கா தி. மு க. சௌந்திர பாண்டியனார் மன்றம் ஆகியவைகளின் சார்பாக மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டது. அன்று இரவு 8-30 மணிக்கு தூமதாபாத் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் புறப்பட்டுச் சென்றார்.

பம்பாய் தே. இ திராவிட மகாஜன சங்கம்

16—1—54 காலை, சங்கச் சார்பில் தாராவி முனிசிபல் தமிழ்ப் பாடசாலை ஏழை மாணவர்களுக்கு, இலவசமாக பாடப் புத்தகங்கள், கற்பலகைகள் வழங்கும் வைபவம் நடைபெற்றது. தோழர் எம். ஜெகநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் எஸ் நடராசன் பாராட்டுரை வழங்கினார்.

திராவிட மறுமலர்ச்சி மன்றம், அழகிரி நினைவுப் படிப்பகம்

மதுரை, ஜன. 27—

23—1—54 இரவு 10 மணியளவில், தோழர் வீ. அன்பழகன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது, படிப்பக மூன்றுவது ஆண்டு விழாவை மார்ச் 7ந் தேதி நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. தோழர்கள் என். ராமநாதன் செயலாளராகவும், என், எஸ். ராசன் பொருளாளராகவும் கொண்ட 9 பேர் அடங்கிய விழாக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குறிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.